
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2022 (2023)

## 29 – தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

### புள்ளியிடும் திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)
## 29 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்
## புள்ளி வழங்கும் விதம்

- பத்திரம் I

காலம் 2 மணித்தியாலம்
5 விடைகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்கள், சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

- பத்திரம் II

காலம் 3 மணித்தியாலம்

தெரிவு வினாக்களில் எவையேனும் 5 இற்கு விடை எழுதியிருத்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 40புள்ளி வீதம் மொத்த புள்ளிகள் 200.

| | | |
|---|---|---|
| இறுதிப் புள்ளி கணித்தல் | பத்திரம் I | 50 |
| | பத்திரம் II | 200 |

இறுதிப்புள்ளி $50 + \frac{200}{4} = 100$

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ................................................................ ✓ △ 4/5

................................................................

................................................................

(ii) ................................................................ ✓ △ 3/5

................................................................

................................................................

(iii) ................................................................ ✓ △ 3/5

................................................................

................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

**29 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** தொடர்பாடுநரிடமிருந்து பெறுநருக்குத் தகவலை எடுத்துச்செல்லும் தொடர்பாடல் கட்டமைப்புக்கூறு எது?
(1) அனுபவக்களம் (2) செய்தி (3) பின்னூட்டம்
(4) வழிமுறை (5) சூழல்

**2.** வெகுசனத் தொடர்பாடலில் பொதுவாக இடம்பெறுவது
(1) வட்டவடிவத் தொடர்பாடலாகும். (2) ஒருவழித் தொடர்பாடலாகும்.
(3) இருவழித் தொடர்பாடலாகும். (4) தனிப்பட்ட தொடர்பாடலாகும்.
(5) நேரமற்றைத் தொடர்பாடலாகும்.

**3.** தகவல் பெறும் உரிமையை முதன்முதலில் சட்டரீதியாக்கிய நாடு எது?
(1) சுவீடன் (2) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (3) பிரான்ஸ்
(4) இந்தியா (5) ஜேர்மனி

**4.** செவிமடுத்தல், பேசுதல், போலச்செய்தல், உச்சரிப்பு ஆகியன நேரடியாகத் தொடர்புபடுவது,
(1) எழுத்துத் தொடர்பாடலுடன் ஆகும்.
(2) வாய்மொழித் தொடர்பாடலுடன் ஆகும்.
(3) பேச்சுத் தொடர்பாடலுடன் ஆகும்.
(4) முறைசார் தொடர்பாடலுடன் ஆகும்.
(5) செவிப்புலத் தொடர்பாடலுடன் ஆகும்.

**5.** மனித குலத்தில் தொட்டுணரமுடியாத பண்பாட்டு மரபுரிமையாக யுனெஸ்கோவினால் முதன்முதலில் அடையாளப்படுத்தப்பட்ட உள்ளூர்க் கலை வடிவம் எது?
(1) கோலம் (2) சொக்கரி (3) பொம்மலாட்டம்
(4) நாடகம் (5) சடங்குகள்

**6.** தொடர்பாடல் மானுட உறவுகளை விருத்தி செய்கின்றது, அது குறிப்பிட்டதொரு தேசத்திற்காக வரையறை செய்யப்படுவதல்ல என்பதுடன் காலத்தையும் கடந்து நிற்பது. இச்சிந்தனை வெளிப்படுத்தப்பட்டது
(1) சார்ள்ஸ் கூலியினால் ஆகும்.
(2) வில்பர் ஷ்ராமினால் ஆகும்.
(3) ஷெனொன் மற்றும் வீவரினால் ஆகும்.
(4) சார்ள்ஸ் ஒஸ்கூட்டினால் ஆகும்.
(5) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லினால் ஆகும்.

**7.** எழுத்தாளரின் அபிப்பிராயத்தையும் அடையாளத்தையும் எடுத்துக்காட்டும் வகையிலாக செய்திப்பத்திரிகையொன்றின் அங்கமாக அமைவது எது?
(1) செய்தி (2) சித்திரிப்புக் கட்டுரைகள் (3) பத்தி எழுத்துக்கள்
(4) விளம்பர எழுத்துரு (5) நேர்காணல்கள்

8. செய்திப்பத்திரிகையொன்று அறநெறிகளை மீறும்போது, பாதிக்கப்பட்ட தரப்பு எந்த நிறுவனத்திடமிருந்து தமது குறைகளுக்கான நீதியைக் கோர முடியும்?
   (1) இலங்கைப் பத்திரிகைப் பேரவை
   (2) அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட்
   (3) அரசாங்கத் தகவல் திணைக்களம்
   (4) இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம்
   (5) வெகுசன ஊடக அமைச்சு

9. மானுடர்களின் நடத்தைகளும் உளப்போக்குகளும் மிகவும் தொடர்புடையனவாக அமைவது,
   (1) குழுத் தொடர்பாடலுடன் ஆகும்.
   (2) பண்பாட்டிடைத் தொடர்பாடலுடன் ஆகும்.
   (3) வாய்மொழியற்ற தொடர்பாடலுடன் ஆகும்.
   (4) ஆளிடைத் தொடர்பாடலுடன் ஆகும்.
   (5) முறைசாராத் தொடர்பாடலுடன் ஆகும்.

10. 'தோலம்' நிகழ்த்துகையின் வழக்காறுகள் அதிகம் சுட்டிநிற்பவை,
   (1) நாட்டார் பாரம்பரியத்தை ஆகும்.
   (2) அதன் அமைப்பிலுள்ள எளிமையை ஆகும்.
   (3) பண்பாட்டுச் சூழலமைவை ஆகும்.
   (4) கருப்பொருள் உள்ளடக்கத்தை ஆகும்.
   (5) பாரம்பரியமான பயிற்சிகளை ஆகும்.

11. தகவல்களைப் பெறவும், அனுப்பவுமான தகைமையானது எடுத்துக்காட்டுவது,
   (1) தொடர்பாடல் பன்முகத்தன்மையானது என்பதையாகும்.
   (2) தொடர்பாடல் ஒரு செயன்முறை என்பதையாகும்.
   (3) தொடர்பாடல் இருவழித் தன்மையானது என்பதையாகும்.
   (4) தொடர்பாடல் பின்னூட்டத்தை உள்வாங்குகின்றது என்பதையாகும்.
   (5) தொடர்பாடல் தாக்கங்களை உள்வாங்குகின்றது என்பதையாகும்.

12. ஊடகச் செயன்முறையில் இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் வகிபாகம் எது?
   (1) வாயிற்காப்பு ஆகும்.
   (2) ஒழுங்காக்குதல் ஆகும்.
   (3) ஊடக விஸ்தீரணம் ஆகும்.
   (4) பின்னூட்டம் ஆகும்.
   (5) தணிக்கை செய்தல் ஆகும்.

13. செறிசார் தடையென அறியப்படும் பலவீனம் நிகழ்தலானது, பின்வரும் எந்தவொரு சந்தர்ப்பத்துடன் தொடர்புபடுகின்றது?
   (1) செய்தியை முன்வைத்தல்
   (2) குறியீடுகளைத் தெரிவுசெய்தல்
   (3) பெறுநரின் வகிபங்கு
   (4) தொழினுட்பத்தின் பயன்பாடு
   (5) செவிமடுத்தற் செயன்முறை

14. படைப்பாக்கப் பணியொன்றின் முக்கிய இயல்பு எது?
   (1) தொடர் பயிற்சி
   (2) பல்வகைமை
   (3) புத்தாக்கம் / சுயம்
   (4) நிகழ்த்துகைப் பண்பு
   (5) பன்முகத்தன்மை

15. ஊடக விமர்சனம் அல்லது திறனாய்வின் மையம்
   (1) ஊடகவியலாளர் ஆகும்.
   (2) செய்தி ஆகும்.
   (3) பெறுநர் ஆகும்.
   (4) ஊடக விளங்கறிவு ஆகும்.
   (5) அனுபவக்களம் ஆகும்.

16. பரீட்சையில் சித்தியடைவதற்காகப் பாடவிடயத்தில் கவனம் செலுத்துமாறும், ஊடகங்களில் அதிகநேரம் செலவிட வேண்டாமென்றும் ஆசிரியரொருவர் மாணவர்களை வேண்டிக்கொண்டார். இங்கு, ஊடக விளங்கறிவு தொடர்பில் மாணவர்களுக்கு எடுத்துச்சொல்லப்பட்ட முக்கிய அம்சம்
   (1) தனிப்பட்ட அவதானம் ஆகும்.
   (2) அறிவுக் கட்டமைப்பு ஆகும்.
   (3) திறன்கள் ஆகும்.
   (4) ஆய்ந்தறிதல் ஆகும்.
   (5) மதிப்பீடு ஆகும்.

**17.** செய்திப்பத்திரிகையொன்றின் ஆசிரியரான திரு. இராஜரட்ணம் ஓய்வு பெற்றபோது, அவர் அதே செய்திப் பத்திரிகையின் குறைகேள் அதிகாரியாக (ஓம்புட்ஸ்மென்) நியமிக்கப்பட்டார். அவரது புதிய வகிபாகம்,
(1) முற்தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.
(2) கூட்டுத் தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.
(3) சட்டரீதியான தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.
(4) சுய தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.
(5) நிறுவனரீதியான தணிக்கையைக் கொண்டிருக்கின்றது.

**18.** பிரித்தானியா, 1927இல் பிரித்தானிய அனுமதி / சாசனத்தை (Royal Charter) என்ன தேவைக்காக அறிமுகப்படுத்தியது?
(1) இலங்கையில் வானொலி ஒலிபரப்பை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.
(2) இந்தியாவில் வானொலி ஒலிபரப்பை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.
(3) பிரித்தானியாவில் தொலைக்காட்சி ஒளிபரப்பை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.
(4) பொதுமக்கள் சேவை ஊடக எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.
(5) செய்தி ஒழுக்கநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு ஆகும்.

**19.** வில்பர் ஷ்ராம் கூறுவதன்படி, வெகுசன ஊடகங்கள் மூன்று வகிபங்குகளைக் கொண்டிருக்கின்றன. அவை எவையாகும்?
(1) பாதுகாவலர், வாயிற்காப்பாளர், கலந்துரையாடல் சபை
(2) கலந்துரையாடல் சபை, ஆசிரியர், விமர்சகர்
(3) விமர்சகர், பாதுகாவலர், வாயிற்காப்பாளர்
(4) வாயிற்காப்பாளர், கலந்துரையாடல் சபை, ஆசிரியர்
(5) ஆசிரியர், பாதுகாவலர், கலந்துரையாடல் சபை

**20.** ஆய்வொன்றில் வினாக்கொத்தைப் பயன்படுத்திப் பெறப்பட்ட தரவுகளாக அமைவன
(1) முதனிலைத் தரவுகள் ஆகும்.
(2) அளவுசார் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகும்.
(3) பண்புசார் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகும்.
(4) இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகும்.
(5) முதனிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகும்.

**21.** பாதுகாப்பு மற்றும் அனர்த்தம் தொடர்பான விடயங்களில் முன்னெச்சரிக்கை விடுக்கப்படுகின்றமை தொடர்புபடுவது,
(1) மேற்பார்வையுடன் ஆகும்.
(2) தூண்டலுடன் ஆகும்.
(3) பொருட்கோடலுடன் ஆகும்.
(4) இணைப்பாக்கம் செய்தலுடன் ஆகும்.
(5) சமூகமயமாக்கலுடன் ஆகும்.

**22.** 'ஹப்' (HUB) மற்றும் ஒஸ்கூட்-ஷ்ராம் தொடர்பாடல் மாதிரிகள் இரண்டிலும் மறைந்திருக்கும் பொதுவிலான அம்சமாக அமைவது எது?
(1) வாயிற்காப்பு (2) ஒழுங்காக்குதல் (3) அனுபவக்களம்
(4) பின்னூட்டம் (5) தாக்கம்

**23.** தவறான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) எழுத்துத் தொடர்பாடல் முறைசார் தொடர்பாடலுக்கு அதிகம் பொருத்தமானது.
(2) பேச்சுத் தொடர்பாடல் அதிகம் நேருக்குநேராக இடம்பெறும்.
(3) வாய்மொழித் தொடர்பாடல் நேரத்தை எடுத்துக்கொள்ளாது.
(4) பேச்சுத் தொடர்பாடல் அதிகம் முறைசாராத் தொடர்பாடலில் பயன்படுத்தப்படும்.
(5) எழுத்து மற்றும் பேச்சுத் தொடர்பாடல்கள் வாய்மொழித் தொடர்பாடலுக்கு உரித்தானவையல்ல.

**24.** திரைப்படமொன்றில், பிரதான கதாபாத்திரம் நீதிமன்றத்தில் வழக்கொன்றை வெற்றிகொண்டதன் பின்னர் வெளியே வரும்போது, அக்கதாபாத்திரத்தின் மேன்மையை வெளிப்படுத்தும் காட்சியொன்றைப் படமாக்குவதாயின், அதற்கு அவசியம் பயன்படுத்தவேண்டிய கமெரா எடுப்பு / பார்வைக் கோணம்
(1) நீள் எடுப்பு (2) அண்மைநிலை எடுப்பு
(3) பதிகோணம் (4) மிக நெடுந்தொலை எடுப்பு
(5) உயர்கோணம்

25. ஊடக விளங்கறிவில் அடிப்படையான தேவை
(1) செய்தியை மதிப்பிடுதல் ஆகும்.
(2) செய்தியைப் பகுப்பாய்வு செய்தல் ஆகும்.
(3) செய்தியைப் பொருட்கோடல் செய்தல் ஆகும்.
(4) செய்தியைத் தொகுப்பாக்குதல் ஆகும்.
(5) செய்தியைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகும்.

26. ஊடகக் கற்கைகளில் ஆகக்குறைந்த முக்கியத்துவமுடையது எது?
(1) ஊடக விளங்கறிவு
(2) விமர்சனரீதியான ஊடகப் பாவனை
(3) எழுத்தாற்றல்
(4) ஊடகப் பண்பாட்டைப் புரிந்துகொள்ளல்
(5) மொழித் தேர்ச்சி

27. புதிதாக நியமிக்கப்பட்ட இந்தியப் பிரதமர் பற்றிய இணையக் கட்டுரையொன்றின் வழியாக, அவர் படித்த பாடசாலை, பல்கலைக்கழகம், குடும்பம் பற்றிய தகவல்களை அறிந்ததோடு அவரது குரலைச் செவிமடுக்கவும், அவர் பற்றிய வீடியோ ஒன்றினைப் பார்வையிடவும் ரவியால் முடிந்தது. இந்தச் செயன்முறை,
(1) மீயுரை என்பதாகும்.
(2) தானியங்கி என்பதாகும்.
(3) எண்ணிமப்படுத்தல் என்பதாகும்.
(4) வலையமைப்பாதல் என்பதாகும்.
(5) இடைத்தொடர்பாக்கம் என்பதாகும்.

28. ஆளிடைத் தொடர்பாடலில் இடையூறாகக் கருத்திற்கொள்ளப்படுவதற்கு ஆகக்குறைந்த சந்தர்ப்பத்தைக் கொண்டிருப்பது எது?
(1) தலைவலி
(2) மகிழ்ச்சி
(3) எதிரொலி
(4) தெளிவு
(5) பேரச்சம் (horror)

29. பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற்கொள்க.
A - இது, தனிப்பட்ட சுதந்திரத்தின் நீட்சியாகும்.
B - அபிப்பிராயங்கள் அவரவர் விருப்பத்திற்கேற்றபடி தன்னியல்பாக வெளிப்படுத்தப்பட முடியும்.
C - ஜனநாயகச் சமூகங்களில் ஊடகம் வழியாகப் பெறுநர்களை நோக்கி முன்வைக்கப்படும் தகவல்களை ஒருவர் ஏற்றுக்கொள்ளவோ அல்லது ஏற்றுக்கொள்ளாது விடவோ முடியும்.

மேற்கூறப்பட்டவற்றில், ஊடக சுதந்திரத்துடன் தொடர்புடைய சரியான கூற்று
(1) A மாத்திரம் ஆகும்.
(2) A மற்றும் B மாத்திரம் ஆகும்.
(3) A மற்றும் C மாத்திரம் ஆகும்.
(4) B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(5) C மாத்திரம் ஆகும்.


30. ஆய்வொன்றில் தரவுகளைச் சேகரித்த பின்னர், அவசியம் பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகள் வரிசைக்கிரமமாக அமைவது,
(1) பிரச்சினையை அடையாளம் காணுதல், தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், முடிவுகளை எட்டுதல்
(2) தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், முடிவுகளை எட்டுதல், அறிக்கை எழுதுதல்
(3) குறிக்கோள்களை அடையாளம் காணுதல், முடிவுகளை எட்டுதல், அறிக்கை எழுதுதல்
(4) முடிவுகளை எட்டுதல், தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், அறிக்கை எழுதுதல்
(5) கருப்பொருளைத் தீர்மானித்தல், தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல், முடிவுகளை எட்டுதல்

31. பொதுமக்கள் தொடர்பில் 'எதுவும் மறைக்கப்படக் கூடாது' என்ற எண்ணக்கரு விவரிக்கப்பெற்றது,
(1) செய்தி முகவர் / பரப்புரை மாதிரியில் ஆகும்.
(2) பிரசித்த மாதிரியில் ஆகும்.
(3) பொதுமக்கள் தகவல் மாதிரியில் ஆகும்.
(4) இருவழி சமச்சீரற்ற மாதிரியில் ஆகும்.
(5) இருவழி சமச்சீர் மாதிரியில் ஆகும்.

- **32** தொடக்கம் **34** வரையான வினாக்கள் கீழே தரப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

அடுத்தமாதம் முதலாவது ஞாயிற்றுக்கிழமையில் இடம்பெறவுள்ள தனது பிறந்தநாளுக்கு ஆஷா (A), பரணி (B) யைத் தொலைபேசி அழைப்பொன்றின் (P) வழியாக வரவேற்றிருந்தார். குறித்த நாளில் தனது உறவினர்களின் வருகை இடம்பெறுவதை ஞாபகப்படுத்திக் கொண்ட பரணி (B), மீள அழைப்பை ஏற்படுத்தி (Q), பிறந்தநாள் வரவேற்பு அழைப்பை பண்புடன் மறுத்திருந்தார்.

இந்தச் செயன்முறை, பின்வரும் வரைபடத்தைப் பயன்படுத்திக் காட்சிப்படுத்தப்பட முடியும்.




**32.** மேற்படி தகவல்களின்பேரில், P மற்றும் Q அடிப்படையில் கொண்டிருப்பவை,
(1) ஒலிகள் ஆகும். (2) வார்த்தைகள் ஆகும். (3) தகவல்கள் ஆகும்.
(4) குறியீடுகள் ஆகும். (5) தரவுகள் ஆகும்.

**33.** இங்கே செயன்முறை **B ⟶ Q ⟶ A** ஆனது சிறப்பாக விபரிக்கப்பட்டது
(1) குறிமுறையாக்கம் எனவாகும். (2) குறிமுறையவிழ்ப்பு எனவாகும்.
(3) ஊடு கடத்துதல் எனவாகும். (4) பின்னூட்டம் எனவாகும்.
(5) பெறுதல் எனவாகும்.

**34.** ஒஸ்கூட்-ஷ்ராம் தொடர்பாடல் மாதிரியின்படி, Bயினுள் இடம்பெற்ற செயன்முறையின் வரிசைக்கிரமம் எது?
(1) குறிமுறையவிழ்ப்பு, பொருட்கோடல், குறிமுறையாக்கம்
(2) குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு, பொருட்கோடல்
(3) பொருட்கோடல், குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு
(4) குறிமுறையாக்கம், பொருட்கோடல், குறிமுறையவிழ்ப்பு
(5) குறிமுறையவிழ்ப்பு, குறிமுறையாக்கம், பொருட்கோடல்

**35.** பொதுமக்கள் தொடர்பு மற்றும் விளம்பரப்படுத்தல் பற்றிய மிகச் சரியான கூற்று எது?
(1) விளம்பரப்படுத்தல் ஒரு முகாமைத்துவ இலக்காகும்.
(2) தூண்டுதல் விளம்பரப்படுத்தலில் மாத்திரம் முக்கியமானதாகும்.
(3) பொதுமக்கள் தொடர்பு ஒரு சந்தைப்படுத்தல் இலக்காகும்.
(4) நல்லெண்ணத்தை விருத்திசெய்வது பொதுமக்கள் தொடர்பு, விளம்பரப்படுத்தல் இரண்டிலும் எதிர்பார்க்கப்படுகின்றது.
(5) விளம்பரப்படுத்தல், பொதுமக்கள் தொடர்பு இரண்டிலும் வெகுசன ஊடகங்கள் பயன்படுத்தப்படும்.

**36.** கணக்கெடுப்பு ஆய்வொன்றை (Survey) மேற்கொள்வது தொடர்பிலான தவறான கூற்று எது?
(1) ஒப்பீட்டுரீதியாக இது குறைந்த காலத்தை எடுத்துக் கொள்ளும்.
(2) விபரமான மற்றும் ஆழமான பதில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
(3) ஒப்பீட்டுரீதியில் குறைந்த செலவீனமுடையது.
(4) பெரும் எண்ணிக்கையான கூட்டுப் பதிலளிப்பாளர்கள் பயன்படுத்தப்பட முடியும்.
(5) மென்பொருட்களைப் பயன்படுத்தி தரவுகள் துரிதமாகப் பகுப்பாய்வு செய்யப்பட முடியும்.

**37.** A, B, C, D என்பன தொடர்பாடலுடன் தொடர்புடைய முக்கியமான நாட்கள். அவை, வரிசைக்கிரமம் அல்லாதவாறு 1, 2, 3, 4 ஆகியவற்றைப் பயன்படுத்திப் பெயரிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| A - பெப்ரவரி 13ஆம் திகதி | 1. எழுத்தறிவு தினம் |
| B - மே 3ஆம் திகதி | 2. மனித உரிமைகள் தினம் |
| C - செப்ரெம்பர் 8ஆம் திகதி | 3. உலக வானொலித் தினம் |
| D - டிசெம்பர் 10ஆம் திகதி | 4. உலக ஊடக சுதந்திர தினம் |

மேற்படி திகதிகளுடன் சரியாகப் பொருந்தும் பெயர்களைத் தரும் தெரிவைத் தேர்ந்தெடுக்குக.
(1) A1, B2, C3, D4 (2) A2, B3, C4, D1 (3) A4, B2, C1, D3
(4) A3, B4, C1, D2 (5) A4, B3, C2, D1

38. பாடசாலை மாணவர்களை இலக்காகக்கொண்ட, கல்வியுடன் தொடர்புடையதாக இணைய வானொலியொன்றை அறிமுகம் செய்வதன் முக்கியத்துவத்தை ஆசிரியர் வலியுறுத்தினார். இந்த முன்மொழிவுடன் தொடர்புடைய ஊடகப் போக்கு

(1) ஊடகக் குவிவு
(2) சிறு கூறுகளாக்குதல்
(3) கட்டுப்பாட்டுத் தளர்வு
(4) புத்தாக்கப் பரவலாக்கம்
(5) மாணவரை மையப்படுத்துதல்

39. கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர், ஐரோப்பா முழுவதும் பரவிய பொதுமக்கள் தொடர்பு எண்ணக்கருவானது,

(1) பொதுமக்களையும் தொழிற்துறைகளையும் இணைக்கும் தோற்றப்பாடாக இருந்தது.
(2) தொழிற்துறைகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவுகளை உறுதிப்படுத்தும் தோற்றப்பாடாக இருந்தது.
(3) விற்பனையை விருத்தி செய்யும் விளம்பர முறையாக இருந்தது.
(4) வர்த்தகத் தொடர்புகளை வலுப்படுத்தும் சந்தைப்படுத்துல் உத்தியாக இருந்தது.
(5) உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையேயான முரண்பாடுகளை முகாமைப்படுத்தும் செயன்முறையாக இருந்தது.

40. பின்வருவன, இலங்கையில் தகவல்பெறும் உரிமைச் சட்டம் பற்றிய விவாதமொன்றில் முன்வைக்கப்பட்ட சிந்தனைகளில் சிலவாகும்.

சீதா - தகவல்களை அணுகுதல் என்பது தகவல்களைத் தடையின்றி பெறும் ஆற்றலை எடுத்துச் சொல்கின்றது.

ரோஷான் - அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையையும் திறந்ததன்மையையும் உறுதிப்படுத்த இந்தச் சட்டம் பொதுமக்களுக்கு அனுசரணையாகவுள்ளது.

ரமேஷ் - உரிய நபரின் எழுத்துமூலச் சம்மதமின்றி அந்நபரின் மருத்துவ அறிக்கையையும் மற்றொரு நபருக்கு வெளிப்படுத்துதல் முடியாது.

புஷ்பிகா - மேன்முறையீட்டுச் செயன்முறையில், தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு முக்கிய வகிபங்கொன்றினை ஆற்றுகின்றது.

மாறன் - விண்ணப்பதாரியுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் தகவல் மாத்திரமே வழங்கப்படும்.

மேற்குறித்தவற்றில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய **பொருத்தமற்ற** சிந்தனை வெளிப்படுத்தப்பட்டது,

(1) மாறனினால் ஆகும்.
(2) சீதாவினால் ஆகும்.
(3) ரோஷானினால் ஆகும்.
(4) புஷ்பிகாவினால் ஆகும்.
(5) ரமேஷினால் ஆகும்.

41. பின்வரும் கருப்பொருட்களிலும் அவை பற்றிய விபரிப்பிலும் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.

| கருப்பொருள் | விபரிப்பு |
|---|---|
| 1 – பாரம்பரியப் பண்பாடு | A - ஆழமற்ற, எளிமையான, பெருந்தொகை உற்பத்திப் பொருட்களைக் கொண்டது. |
| 2 - நாட்டார் பண்பாடு | B - இனம்சார்ந்த மற்றும் தேசிய பண்பாடுகளை அடக்குவது. |
| 3 - பிரசித்த பண்பாடு | C - தகவல் பண்பாட்டின் விசேடமான ஒரு வகைப்பாடு |
| 4 - ஊடகப் பண்பாடு | D - செவ்வியல் பண்பாடுகளின் தோற்றத்துக்கான அடிப்படையைத் தருவது. |
| 5 - பூகோளப் பண்பாடு | E - உன்னதமான குறியீட்டுத் தொகுதியின் மீது கட்டியெழுப்பப்படுவது. |

கருப்பொருட்களும் விபரிப்புக்களும் பொருத்தமாகும்போது, சரியான விடையாக அமைவது

(1) 1C, 2D, 3B, 4E, 5A
(2) 1D, 2E, 3C, 4A, 5B
(3) 1D, 2E, 3A, 4B, 5C
(4) 1E, 2D, 3A, 4C, 5B
(5) 1E, 2D, 3C, 4A, 5B

42. ஒரு நாட்டின் அபிவிருத்தியானது சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் தங்கியிருப்பதுடன், அச்செயன்முறை அதே நாட்டின் பிரஜைகளால் முன்னெடுக்கப்படுவதாகவும் அமையும்போது,

(1) அது உள்ளூர் மயமாக்கல் ஆகும்.
(2) அது மக்கள் மையம் ஆகும்.
(3) அது வறுமையை ஒழித்தல் ஆகும்.
(4) அது சமூகமயமாதல் ஆகும்.
(5) அது சமூகத் தொடர்புகள் மற்றும் சமத்துவத்தைக் கட்டியெழுப்புதல் ஆகும்.

**43.** பிரசித்த பண்பாட்டில், எவற்றை வெகுசன ஊடகங்கள் பெரும்பாலும் முன்னிலைப்படுத்துகின்றன?
(1) அழகியல்சார் செய்திகளை ஆகும்.
(2) கல்வி விழுமியங்களுடனான செய்திகளை ஆகும்.
(3) மனிதநேயத்தை முன்னிலைப்படுத்தும் செய்திகளை ஆகும்.
(4) பெறுநர் ஒழுக்கங்களை விருத்திசெய்யும் செய்திகளை ஆகும்.
(5) வணிக ஆதாயங்களை உள்ளடக்கும் செய்திகளை ஆகும்.

**44.** பெறுநரின் வகிபங்கு பற்றிய சரியான கூற்று எது?
(1) பெறுநரின் வகிபங்கு நிலையானது.
(2) பெறுநரின் வகிபங்கு எப்போதும் தன்னினைவு அல்லது உணர்வுள்ளது.
(3) பெறுநர் தொடர்பாடுநராக முடியாது.
(4) பெறுநரின் விளங்கறிவு பல்வகைமையானது.
(5) பெறுநரின் அனுபவக்களம் பரந்தது.

**45.** பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற்கொள்க.
A - தனிப்பட்ட மற்றும் பொதுசன நடத்தைகளை மாற்றக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமையளித்தல்
B - தொடர்பாடல் மற்றும் சமூகக் கட்டமைப்புடன் இணைந்திருக்கும் உறவுகளை விருத்தி செய்தல்
C - விமர்சனரீதியான கோட்பாடுகள் மூலம் மானுட சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குதல்
D - மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தை வலுப்படுத்துதல்

ஸ்ரீநிவாஸ் மெல்கோட்டேயின் அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய சிந்தனைகளுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கும் கூற்றுக்கள்
(1) A மற்றும் B மாத்திரம் ஆகும்.
(2) A, B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(3) B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(4) B, C மற்றும் D மாத்திரம் ஆகும்.
(5) C மற்றும் D மாத்திரம் ஆகும்.

**46.** ரமணி தனது படைப்பாக்கச் சிந்தனை தொடர்பில் வகுப்பறையில் சில பார்வைகளை முன்வைத்தார்.
A - படைப்பாக்கப் பணியொன்று தனித்து சுய அனுபவத்தில் மாத்திரமே தங்கியிருப்பதாகும்.
B - படைப்பாக்கப் பணியில் கற்பனை பயன்படுகின்றது.
C - திறன், தொடர்பயிற்சி மற்றும் பிறப்பு ஞானம் ஆகியன முக்கியமானவை.
D - புதிய சிந்தனைகளின் பால் நெகிழ்வுடனிருத்தல் பயன்தரக்கூடியது.

மேற்குறித்தவற்றில் சரியான கூற்றுக்கள்,
(1) A, B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(2) A, B மற்றும் D மாத்திரம் ஆகும்.
(3) A மற்றும் C மாத்திரம் ஆகும்.
(4) B மற்றும் C மாத்திரம் ஆகும்.
(5) B, C மற்றும் D மாத்திரம் ஆகும்.

**47.** யுனெஸ்கோவின்படி, சமூக இடைவெளியைக் குறைத்துக்கொள்ளவும், ஒரு நாட்டின் அமைதியையும் சம நிலையையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும்
(1) ஊடகத் தொழிற்றுறையின் உரிமையாண்மை அவசியம் அரசிடம் வழங்கப்படவேண்டும்.
(2) ஊடகத் தொழில்நுட்பம் விருத்திசெய்யப்பட வேண்டும்.
(3) தொடர்பாடல் கொள்கைகள் அவசியம் முறைப்படுத்தப்பட வேண்டும்.
(4) மனித உரிமைகள் பற்றிய அறிவு அவசியம் முன்னேற்றமடைய வேண்டும்.
(5) ஊடக அறநெறிகள் அவசியம் உருவாக்கப்பட வேண்டும்.

**48.** இலங்கையில் கருத்து மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரம் பற்றிய **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அது பிரஜைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
(2) அது அரசியலமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
(3) அது அவசரகாலச் சட்டத்தினால் தாழ்நிலைப்படுத்தப்படுகின்றது.
(4) அது குறித்த நேரங்களில் ஓர் அடிப்படை உரிமையாகும்.
(5) அது அடுத்தவர்களின் உரிமைகளில் தங்கியிருக்கின்றது.

49. பின்வரும் சந்தர்ப்பங்களைக் கருத்திற்கொள்க.
X - 'A' என்னும் திரைப்படத்தைத் தயாரிப்பதற்காக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட கடன் பற்றிய விபரங்களைக் கோருதல்
Y - அரசாங்கத் திரைப்படப் பிரிவிற்குச் சொந்தமான திரைப்படத்தின் பகுதியொன்றை (கிளிப்) செய்தி விடயமொன்றில் இணைத்துக் கொள்ளுதல்

மேற்படி சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய சட்டங்கள் பற்றிய சரியான தெரிவு,

(1) X - புலமைச் சொத்துச் சட்டம் Y - தகவலறியும் உரிமைச் சட்டம்
(2) X - தகவலறியும் உரிமைச் சட்டம் Y - புலமைச் சொத்துச் சட்டம்
(3) X - பொது அளிக்கைச் சட்டம் Y - தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்
(4) X - தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம். Y - பொது அளிக்கைச் சட்டம்
(5) X - தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம். Y - புலமைச் சொத்துச் சட்டம்

50. பின்வருவன பொதுமக்கள் தொடர்புடன் சம்பந்தப்பட்ட சில செயற்பாடுகளாகும்.
A - உள்ளக - வெளியகத் தரப்புகளுடன் உறவுகளைப் பேணுதல்
B - அரசியல் - உயர்நிலையினர் தொடர்புகளை முகாமித்தல்
C - நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (Corporate Social Ressponsibility) நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்
D - ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடன் உறவுகளைப் பேணுதல்

மேற்படி செயற்பாடுகளுடன் தொடர்புடைய பொதுமக்கள் தொடர்புச் சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டும் வரிசைக்கிரமத்தினைத் தெரிவுசெய்க.

(1) வியாபார, ஊடக, நிறுவன, அரச பொதுமக்கள் தொடர்பு
(2) நிறுவன, அரச, வியாபார, ஊடக பொதுமக்கள் தொடர்பு
(3) ஊடக, நிறுவன, அரச, வியாபார பொது மக்கள் தொர்பு
(4) அரச, வியாபார, ஊடக, நிறுவன பொதுமக்கள் தொடர்பு
(5) நிறுவன, அரச, ஊடக, வியாபார பொதுமக்கள் தொடர்பு

❋❋❋

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **29**

විෂයය / பாடம்: **தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 3 | 21. | 1 | 31. | 3 | 41. | 4 |
| 02. | 2 | 12. | 2 | 22. | 4 | 32. | 4 | 42. | 1 |
| 03. | 1 | 13. | 2 | 23. | 5 | 33. | 4 | 43. | 5 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 3 | 34. | 1 | 44. | 4 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 5 | 35. | 5 | 45. | 3 |
| 06. | 1 | 16. | 1 | 26. | 3 | 36. | 2 | 46. | 5 |
| 07. | 3 | 17. | 5 | 27. | 1 | 37. | 4 | 47. | 3 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 4 | 38. | 2 | 48. | 4 |
| 09. | 2 | 19. | 5 | 29. | 3 | 39. | 5 | 49. | 2 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 2 | 40. | 1 | 50. | 2 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

# தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

## 29 - பகுதி II

**1.** பாடசாலை பரிசளிப்பு விழாவை வெற்றிகரமானதொன்றாக மேற்கொள்ள ஊடகக் கழகத்தின் பங்களிப்பு முக்கியமானதென்பதை ஆசிரியர் வலியுறுத்தினார்.

(i) விழா தொடர்பான செயற்பாடுகளில் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே இடம்பெறக்கூடுமான முறைசாராத் தொடர்பாடல் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் உத்தியோகப்பற்றற்றதாக நிகழும் அனைத்துத் தொடர்பாடல் நிகழ்வுகளையும் கருத்திற்கொள்ளலாம்.**

- மாணவர்களால் திடீரென நிகழ்த்தப்படும் மாற்றங்கள் தொடர்பில் ஆசிரியருக்குத் தெரியப்படுத்தப்படுதல்.
- நிகழ்வு ஏற்பாட்டுச் செயற்பாடுகளில் ஆசிரியர் - மாணவர் இருதரப்பினரும் மறுதரப்பினரை மதிப்பீடு செய்தல், அடுத்தவருக்கு வழிகாட்டுதல் மற்றும் மறுப்பினைத் தெரிவித்தல்.
- இன்னுமொரு பாடசாலை நிகழ்வை அடிப்படையாகக் கொண்ட யோசனைகளைப் பகிர்தல்.
- நிகழ்வு பற்றிய பெற்றோரின் நிலைப்பாடு மற்றும் உளப்போக்கினை ஆசிரியருக்கு மாணவர் தெரியப்படுத்துதல்
- நிகழ்வு பற்றி சமூகத்தில் காணப்படும் நிலைப்பாடுகளை இருதரப்பினரும் வெளிப்படுத்துதல்.
- நிகழ்வுபற்றிய உடனடிமாற்றங்கள் தொடர்பில் ஆசிரியரால் முன்வைக்கப்படும் திடீர் அறிவித்தல்கள்.
- நிகழ்வு பற்றிய வதந்திகள், ஊர்வம்புகள், பொறுப்பேற்பவர் பெயர் குறிப்பிடப்படாத புகார்கள் என்பவற்றை மாணவர் ஆசிரியருக்குத் தெரியப்படுத்துதல்.
- புதிய ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே இடம்பெறும் கருத்துப்பரிமாற்றமும் சிந்தனைப் பகிர்வுகளும்.

**02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்**

(ii) நிகழ்வை ஒழுங்குபடுத்தும்போது ஆளிடைத் தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் இரண்டு அனுகூலங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

- நிகழ்வு ஏற்பாட்டாளர்களுக்கு இடையில் மற்றும் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் - அவர்களுடன் தொடர்புடைய ஏனைய பிரிவினருக்கு இடையே மிகவும் இலகுவாக இடைச்செயற்பாட்டுத் தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றல்.
- நிகழ்வு ஏற்பாட்டாளர்களுக்கு இடையே சமூக இடைத்தொடர்புகளை மேம்படுத்தும் ஆற்றல்.
- நிகழ்வை ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளின்போது தூண்டல் செயற்பாட்டை அதிகம் பிரயோகிக்கக் கூடிய ஆற்றல்.
- நிகழ்வு ஏற்பாட்டாளர்களுக்கு இடையே எளிதில் அந்நியோன்னியப் புரிந்துணர்வையும் நம்பிக்கையினையும் உறுதி செய்யலாம்.
- மிகவும் அதிகமான ஆழ்பரிவிற்கு இடமளித்தல்.
- நிகழ்வை ஒழுங்குப்படுத்தும்போது ஏற்படக்கூடிய சந்தேகங்கள், கேள்விகளை தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

**04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்**

(iii) இந்த நிகழ்வானது ஒரு குழுத் தொடர்பாடல் சந்தர்ப்பமாகும். தமது பணியைச் சிறப்பாக நிறைவேற்ற நிகழ்ச்சி அறிவிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படக்கூடிய குழுத் தொடர்பாடல் முறைகள் மூன்றினை விபரிக்குக. (12 புள்ளிகள்)

- குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு அறிவிப்பினை முன்வைத்தல்.
- முன்னாயத்தத்தினை மேற்கொள்ளல்.
- வாய்மொழி மற்றும் வாய்மொழிசாரத் தொடர்பாடல் வழிமுறைகளைப் பயன்படுத்துதல்.
- பல்வேறு தொடர்பாடல் கருவிகளைப் பயன்படுத்துதல்.
- கவர்ச்சியான பேச்சினை முன்வைத்தல்.
- வெளிச்சவீட்டுக் கோட்பாடு / கலங்கரை விளக்க உபாயமுறையைப் பயன்படுத்துதல்.
- பெறுநர்கள் /பார்வையாளர்களை மையப்படுத்திய பேச்சினை மேற்கொள்ளல்.
- பெறுநரது எதிர்வினைகள் தொடர்பில் அவதானம் செலுத்துதல்.
- நேரமுகாமைத்துவத்தினைப் பின்பற்றுதல் .
- ஒழுக்கநெறியைப் பின்பற்றுதல் .
- கடமை மற்றும் பொறுப்புணர்வுடன் செயலாற்றுதல்.

**மேற்காணும் விடயங்கள் நிகழ்வை ஒழுங்குபடுத்தும் அறிவிப்பாளரின் வகிபாகத்தை அடிப்படையாகக் கொண்டு விவரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.**

**04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்**

(iv) விழாவின் வேறுபட்ட விடயங்களுக்காக நாட்டார் கலை கருப்பொருளைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன்போது நாட்டார் கலைகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் நான்கினை உதாரணங்களுடன் விபரிக்குக. (16 புள்ளிகள்)

- பரப்புரை / பிரச்சாரம் / விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்காக.
  உதாரணம்:- பறை, கூத்து, தெருக்கூத்து, வீதி நாடகம்
- வரவேற்பு
  உதாரணம்:- வரவேற்பு நடனம், வரவேற்புப் பாடல்கள், இன்னியம் இசைமுழக்கம், வெற்றிலை கொடுத்து வரவேற்றல்
- பாரம்பரிய முறைப்படி விருந்தினர்களுக்குத் தூது அனுப்புதல்.
- அலங்காரங்கள்
  உதாரணம்:- தென்னை, பனை ஒலைகளைப் பயன்படுத்தி அலங்காரங்களை மேற்கொள்ளல், அலங்காரக் கைவினைப் பொருட்கள்
- விழாவில் நாட்டார் கலைகளை நிகழ்த்துதல்
  உதாரணம்:- நாட்டார் பாடல்கள், நாட்டார் ஆட்டங்கள் போன்றவற்றை முன்வைத்தல்
- விருதுகள், பரிசுகள் வழங்கல்
  உதாரணம்:- நாட்டார் கலைப்பொருட்கள், அலங்காரப் பொருட்கள், சித்திரங்கள்
- நாட்டார் உணவுகளைப் பரிமாறுதல்
  உதாரணம்:- பாரம்பரியத் தின்பண்டங்கள், பானங்களை விருந்தினர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் வழங்குதல்

**குறிக்கப்பட்ட சந்தர்ப்பம் உதாரணங்களுடன் விவரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக**

**04 புள்ளிகள் x 4 = 16 புள்ளிகள்**

2. (i) மெய்நிகர்த் தொடர்பாடலின் **இரண்டு** விசேட தன்மைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

- விளைத்திறனுடன் தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றல்.
- குறைந்த செலவுடையது.
- பாதுகாப்பானது (தகவல் பாதுகாப்பு).
- ஒலி– ஒளி அம்சங்களுடன் தொடர்பாடலில் ஈடுபடும் வாய்ப்பு.
- ஒரே தடவையில் பலருடனும் தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றல்.
- பௌதீக அடிப்படையில் இடவசதி தேவைப்படாமை .
- நேரம், தூரம், காலம் மற்றும் இடம் என்பன பாதிப்பை ஏற்படுத்தாமை.
- கணினி / திறன்தொலைபேசி என்பவற்றைப் பயன்படுத்தி தொடர்பாடலில் ஈடுபடும் வாய்ப்பு.

**02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்**

(ii) செவிப்புலத் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதற்குப் பங்களிக்கும் **இரண்டு** காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

- அவதானத்துடன் செவிமடுத்தல்.
- வெவ்வேறு குரல்களை வேறுபடுத்தியறிதல்.
- செவிப்புலத் தொடர்பாடல் சந்தர்ப்பங்களைக் கற்றல்.
- வெவ்வேறு ஓசைகளைப் பயன்படுத்திப் படைப்பாக்கங்களில் ஈடுபடுதல்.
- அவதானம் சிதறும் சந்தர்ப்பங்களைப் புறக்கணித்தல். (Avoid Distractions)
- உள்ளார்ந்த கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்.

**04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்**

(iii) "தொலைக்காட்சி ஒரு கவர்ச்சிகரமான ஊடகமாகும்." இக்கூற்றினை தொலைக்காட்சி ஊடகத்தின் அடிப்படை அம்சங்கள் **இரண்டின்** ஊடாக விளக்குக. (12 புள்ளிகள்)

- கட்புல – செவிப்புல ஊடகமாகக் காணப்படுதல்.
- பல்வேறு உள்ளடக்கங்களைக் கொண்டு காணப்படுதல்.
- வியப்பூட்டும் மாதிரிகளைக் கொண்டது.
- முறைசார்ந்த முறையில் நிகழ்ச்சிகள் முன்வைக்கப்படுதல்.
- சர்வதேச தொலைக்காட்சி நிகழ்ச்சி மாதிரிகளைப் பின்பற்றுதல்
- செம்மையாக்கம், நேரடி ஒளிபரப்பு முதலான தொழினுட்ப செயற்பாடுகளைக் கொண்டது.
- தனிப்பட்ட, வீட்டுச்சூழலுடன் நெருக்கமான ஊடகம்.
- பார்வையாளரின் முழு அவதானத்தையும் பெறக்கூடியது.
- சுதேசிய மற்றும் தேசிய பண்புகளைக் கொண்டது .
- செய்திகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.

**06 புள்ளிகள் x 2 = 12 புள்ளிகள்**

(iv) கீழ்வரும் நான்கு அம்சங்களில் கவனத்தைச் செலுத்தி, 'பிரசித்த பண்பாடு' என்னும் தலைப்பில் செய்திப்பத்திரிகை ஒன்றுக்கான கட்டுரையொன்றை 250 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(அ) ஆழமற்ற உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளமை

(ஆ) அனைவராலும் அனுபவிக்கக் கூடுமானதாக இருத்தல்

(இ) பாரிய எண்ணிக்கையிலான உற்பத்தியைக் கொண்டுள்ளமை

(ஈ) வர்த்தக நோக்கங்களைக் கொண்டுள்ளமை (16 புள்ளிகள்)

- ஆழமற்ற உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளமை.

  (பிரசித்த பண்பாட்டை புரிந்து கொள்வதற்கு விசேட அறிவோ அல்லது விளக்கமோ தேவைப்படுவதில்லை.)

- அனைவராலும் அனுபவிக்கக் கூடுமானதாக இருத்தல்.

  (அனைத்துப் பெறுநரும் [சிறுவர், இளையோர், முதியவர்] ஒத்தவகையில் இரசிக்கக்கூடியதாக இருத்தல்.)

- பாரிய எண்ணிக்கையிலான உற்பத்தியைக் கொண்டுள்ளமை.

  (பாரிய எண்ணிக்கையிலான பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தையில் அறிமுகம் செய்தல்.)

- வர்த்தக நோக்கங்களைக் கொண்டுள்ளமை.

  (இலாபம் ஈட்டுதலை முதன்மையான நோக்கமாகக் கொண்டிருத்தல்.)

**04 புள்ளிகள் x 4 = 16 புள்ளிகள்**

3. வெவ்வேறு தொடர்பாடல் அடுக்குகளில் ஊர்வம்பு நிகழ்த்தப்படுவது காணக்கிடைக்கப்பெறுகின்றது.

(i) தொடர்பாடல் செயன்முறையின் எந்த அடிப்படைக்கூறு ஊர்வம்பை முன்னெடுப்பதாக அமைகிறது? (04 புள்ளிகள்)

- தகவல் அல்லது செய்தி

**04 புள்ளிகள் x 1 = 04 புள்ளிகள்**

(ii) ஊர்வம்பு முறைசார் தொடர்பாடலில் ஏன் உள்வாங்கப்படுவதில்லை என்பதற்கான காரணங்கள் இரண்டினைச் சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

- அதிகாரபூர்வத்தன்மை காணப்படாது.
- நிச்சயிக்கப்பட்ட இடம், காலம் காணப்படாது.
- ஊர்வம்பினை உருவாக்கியவரைத் தெளிவாக இனங்காணமுடியாது.
- நிச்சயிக்கப்பட்ட படிமுறைகளைக் கொண்டிராது.
- சந்தேகம் மற்றும் ஆர்வத்தின் அடிப்படையில் நிகழும்.
- பொறுப்புக்கூறுபவர் காணப்படமாட்டார்.
- நிச்சயிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் காணப்படாது.
- ஊர்வம்பை உருவாக்கியவரது சுய எண்ணம் வெளிப்படுத்தப்படல்.

**04 புள்ளிகள் x 2 =8 புள்ளிகள்**

(iii) "சில சமூக ஊடகத் தளங்கள் ஊர்வம்பின் அடிப்படையில் இயங்குகின்றன." சமூக ஊடகங்களின் பின்வரும் அம்சங்களை உதாரணங்களாகப் பயன்படுத்தி இக்கூற்றை விளக்குக.

(அ) உள்ளடக்கத்தை உருவாக்குதல்

(ஆ) பங்கேற்பு

(இ) உள்ளடக்கத்தைப் பரிமாறிக்கொள்ளுதல் (12 புள்ளிகள்)

**அ. உள்ளடக்கத்தை உருவாக்குதல்**

- முறையற்ற அல்லது விரும்பத்தகாத விதத்தில் செய்திகளுக்குத் தலைப்பிடுதல்.
- உண்மைக்குப் புறம்பான அல்லது பொய்யான உள்ளடக்கங்களை உருவாக்குதல்.
- செய்திகளை விகாரப்படுத்துதல் அல்லது திரிபுபடுத்துதல்.
- பொய்யான புகைப்படங்களைப் பயன்படுத்துதல்.
- உள்ளார்ந்த நோக்கத்துடன் தகவல்களை ஒழுங்கமைத்தல்
- விரும்பத்தகாத விதத்தில் உள்ளடக்கங்களை உருவாக்குதல்.

**ஆ. பங்கேற்பு**

- கூட்டுக் கலந்துரையாடலினை நடாத்துதல்
- தொலைபேசி அழைப்பு, ஒலிப்பதிவுகளைப் பயன்படுத்துதல் **(voice cut)**
- பார்வையாளர்களது எண்ணிக்கை. **(views)**
- விருப்பங்களை வெளிப்படுத்துதல் **(likes)**
- கருத்துக்களைத் தெரிவித்தல் **(comments)**
- இமோஜிகளைப் **(emojis)** பயன்படுத்துதல்.
- சமூக ஊடகத் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளல் **(sharing)**
- இணைப்பினை மேற்கொள்ளல். **(tag)**
- நேரலை ஒளி-ஒலிபரப்பினை மேற்கொள்ளல். **(live streaming)**

**இ. உள்ளடக்கத்தை பரிமாறிக்கொள்ளுதல்**

- உண்மை அல்லாது, பிரசித்தம், ஆர்வம் மற்றும் கவர்ச்சி முதலான பண்புகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளடக்கப் பரிமாற்றம் நிகழ்தல் **(sharing)**

(சமூக ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டு ஊர்வம்பு செயற்படும் விதத்தை மேற்காணும் விடயங்களுக்கூடாக உதாரணங்களுடன் விபரித்திருத்தல் வேண்டும்.)

**04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்**

(iv) ஊர்வம்பு பேசும் இணையத்தளங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய ஆய்வொன்றினை மேற்கொள்ள நீங்கள் எதிர்பார்த்து, தரவு சேகரிப்பிற்காக வினாக்கொத்து ஒன்றினைப் பயன்படுத்தத் திட்டமிடுகிறீர்கள். வினாக்கொத்தைத் தயாரிக்கும்போது அவசியம் கவனத்திற்கொள்ள வேண்டிய நான்கு பிரதான அம்சங்களை விபரிக்குக. (16 புள்ளிகள்)

- பிரதான நோக்கத்திற்கேற்ப வினாக்களைத் தயாரித்தல்.
- தரவு வழங்குநரின் கல்வி மட்டம், வயதெல்லை, வருமான மட்டம் மற்றும் மொழி முதலான அம்சங்களுக்கு ஏற்ப வினாக்கொத்து தயாரிக்கப்படல் வேண்டும்.
- நேரடி விடைகள் கிடைக்காது எனக் கருதும் வினாக்கள் மறைமுகமான முறையில் வினவப்படல் வேண்டும்.
- முக்கியத்துவத்தின் அடிப்படையில் வினாக்கள் ஒழுங்குப்படுத்தப்படல் வேண்டும்.
- தரவு வழங்குநரை அசௌகரியத்திற்கு உட்படுத்தும் வினாக்களை வினவாது இருத்தல் வேண்டும்.
- திறந்த வினாக்கள் (open-ended questions) மற்றும் மூடிய வினாக்கள் என்பவற்றை ஆய்வின் நோக்கத்திற்கேற்ப பொருத்தமான வகையில் பயன்படுத்துதல்.
- எல்லைப்படுத்தப்பட்ட அளவில் (எண்ணிக்கை) வினாக்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.
- பக்கச்சார்பான விடையை வழங்கக்கூடிய வினாக்களை வினவுதல் கூடாது.
- நீண்ட வினாக்களை வினவுதல் தவிர்க்கப்பட வேண்டும்.
- அனுமானமாக வினாக்களை வினவுதல் கூடாது.
- குழப்பமான வினாக்களை வினவுதல் கூடாது.
- தரவு வழங்குநரால் நிச்சயிக்கப்பட்ட வகையில் விடையை வழங்கக்கூடியவாறு வினாக்களை வினவுதல் வேண்டும்.
- தரவு வழங்குநரின் தனிப்பட்ட வாழ்வில் தாக்கம்செலுத்தாதவாறு வினாக்களை வினவுதல் வேண்டும்.
- காலப்பொருத்தமற்ற வினாக்களை (out-dated questions) வினவுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

(ஊர்வம்புபேசும் இணையத்தளங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களுடன் பொருந்தும் வண்ணம் மேற்காணும் விடயங்கள் விபரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்)

**04 புள்ளிகள் x 4 =16 புள்ளிகள்**

4. (i) ஊடக விளங்கறிவு தொடர்பில் பல அம்சங்கள் காணப்படுகின்றன. ஊடக விளங்கறிவு பற்றி ஐரோப்பிய ஒன்றியம் வரைவிலக்கணப்படுத்தும் அடிப்படை அம்சங்கள் இரண்டினைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

- ஊடகத் தகவல்களை உள்வாங்குதல் / நுகர்தல்.
- ஊடகத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
- ஊடகத் தகவல்களை மதிப்பீடு செய்தல்
- ஊடகத் தகவல்களை படைப்பாக்கம் செய்தல் / நிர்மாணித்தல்.

**02 புள்ளிகள் x 2 =4 புள்ளிகள்**

(ii) வெகுசன ஊடகங்களின் பணிகள் பல்வகைமையானவை. பின்வரும் பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணம் வீதம் பயன்படுத்தி, சுருக்கமாக விபரிக்குக.

(அ) பொருட்கோடல்

(ஆ) இணைப்பாக்கம் செய்தல் (08 புள்ளிகள்)

**அ. பொருட்கோடல்.**

- பல்வேறு நிகழ்வுகள் பற்றிய தெளிவான விளக்கத்தினைப் பெறுநருக்கு வழங்குதல்.
- தகவல்கள் தொடர்பான சமூக அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொண்டு அத்தகவல்களை மதிப்பீடு செய்தல் மற்றும் தொகுத்தல்.
- ஒரு நிகழ்வுடன் தொடர்புடைய பின்னணி, தாக்கம் என்பவற்றை முன்வைத்தல்.

  உதாரணம் :- கொரோனா நோய் தொடர்பில் மக்களுக்கு விளக்கம் அளிப்பதற்காக வைத்திய நிபுணர்களது பங்குபற்றலுடன் கலந்துரையாடல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்.

**ஆ. இணைப்பாக்கம் செய்தல்.**

- வெகுசன ஊடகங்கள் வாயிலாக முன்வைக்கப்படும் செய்திகள் ஊடாக நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்பு உருவாக்கப்படுதல்.
- சமூக நிலைநிறுத்தற் பணியினை மேற்கொள்ளல்.
- வெகுசனத் தொடர்பாடலின் ஊடாக இணைப்பாக்கம் மேற்கொள்ளப்படுதல்.
- மனிதர்களது இருப்பிற்கு அவசியமான அரச மற்றும் அரச சார்பற்ற அனைத்து நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்துதல்.
- ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்தும் தளமாக ஊடகங்கள் செயற்படுதல்.

  உதாரணம்:- மனித-யானை முரண்பாடு பற்றிய மக்கள் கருத்துக்கள் /பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் முன்வைக்கப்படும் கருத்துக்களை அரசின் அவதானத்திற்குக் கொண்டு செல்வதில் ஊடகம் தலையீடு செய்தல்.

**உதாரணங்களுடன் விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.**

**02 புள்ளிகள் x2 = 04 புள்ளிகள் (உதாரணம்)**

**02 புள்ளிகள் x2 = 04 புள்ளிகள் (விபரிப்பு)**

**மொத்தம் = 08 புள்ளிகள்**

(iii) ஊடக விளங்கறிவு ஒரு பல்பரிமாண (multi-dimensional) எண்ணக்கருவாகும். ஊடகப் பயன்பாட்டில் பின்வரும் பரிமாணங்களின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

(அ) உணர்வுசார் பரிமாணம்

(ஆ) அழகியல் பரிமாணம்

(இ) ஒழுக்கம்சார் பரிமாணம் (12 புள்ளிகள்)

**அ. உணர்வுசார் பரிமாணம்.**

மனித உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்ற / மனித உணர்வுகளைக் கிளர்வடையச்செய்யும் ஊடகத் தகவல்கள் / உள்ளடக்கங்கள் இதில் அடங்கும்.

- உணர்வுகளுடன் தொடர்புபட்ட தகவல்கள் இதில் அடங்கும்.

- பல்வேறு நுட்ப முறைகளை பயன்படுத்தி உணர்வுபூர்வமான நிலைமைகளை உருவாக்குதல்.
- ஊடகத் தகவல்களில் உணர்வுசார் விடயங்கள் குறியீடுகள் மூலமாகச் சித்திரிக்கப்படுதல்.
- அன்பு, வெறுப்பு, கவலை, பயம் முதலான பல்வேறு உணர்வுகளை ஊடகத் தகவல்களில் கண்டறிந்து அவற்றை இரசித்தல்.
- படைப்பாளி முன்வைக்கும் குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகளை இனங்கண்டறிதல்.
- ஊடகத் தகவல்களை அடிப்படையாக கொண்டு ஆர்வம், சந்தேகம், எதிர்ப்பு முதலான உணர்வுகளை வெளிப்படுத்துதல் .

**ஆ. அழகியல் பரிமாணம்.**

படைப்பாளி தனது படைப்பில் அழகியலை எவ்வாறு பயன்படுத்தியுள்ளார் என்பதை அறிதல் இதில் அடங்கும்.

- படைப்பை இனங்கண்டறிதல் .
- கண்களுக்கும், காதுகளுக்கும் விருந்தளிக்கும் தகவல்கள் இதில் அடங்கும்.
- பொருத்தமான அளவுகோல்களைப் பயன்படுத்தி சிறந்த படைப்பாளிகளை இனங்கண்டறிதல்.
- படைப்பாளியின் படைப்பாக்கத் திறனைக் கண்டறிதல்.
- படைப்பிற்கு ஏற்ப நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பில் அவதானம் செலுத்துதல்.
- படைப்பின் பண்புத்தரத்தை மதிப்பீடு செய்தல்.

**இ. ஒழுக்கம்சார் பரிமாமணம்.**

ஒழுக்கநெறிகள் சார்ந்த விடயங்கள் அவதானம் செலுத்தப்படும். (மனச்சாட்சி, நன்மை, தீமை முதலானவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படும் கருத்துக்கள் இதில் அடங்கும்.)

- ஊடகத் தகவல்களில் ஒழுக்கநெறிகள் எவ்வாறு உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்தல்.
- ஒரு செயலின் நன்மை மற்றும் தீமை பற்றிய அனுமானங்களை மேற்கொள்ளல்.
- ஊடகத்தில் சித்திரிக்கப்படும் கதாபாத்திரங்கள் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- நல்லது, கெட்டது, நன்மை, தீமை , அனுகூலம், பிரதிகூலம் முதலான விடயங்கள் பற்றிய அனுமானங்களை மேற்கொள்ளல்.

**04 புள்ளிகள் x 3 =12 புள்ளிகள்**

(iv) இலங்கையில் வெகுசன ஊடகங்களின் புதிய போக்குகள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன. அவை எவ்விதம் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.
(அ) புதிய முன்வைப்புப் பாணிகள் பயன்படுத்தப்படுதல்
(ஆ) பொழுதுபோக்கிற்கு அதிக கவனம் செலுத்தப்படுதல் (16 புள்ளிகள்)

**அ. புதிய முன்வைப்புப் பாணிகள் பயன்படுத்தப்படுதல்**

- செவிப்புல, கட்புல- செவிப்புல ஊடகங்களில் மெய்மை நிகழ்ச்சிகள் அதிகமாக முன்வைக்கப்படுதல் (Reality shows).
- ஊடகக் கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் அதிகமாக முன்வைக்கப்படுதல் (Talk shows).
- தொலைக்காட்சியில் பத்திரிகைகள் மீதான கண்ணோட்டம் போன்ற நிகழ்ச்சிகளை முன்வைக்கும் போது ஒளிப்பதிவுகளையும் பயன்படுத்துதல்.

- அச்சு ஊடகங்களில் புகைப்படங்கள், கேலிச்சித்திரங்கள் மற்றும் தகவல் வரையுருக்கள் பயன்படுத்துதல்.
- மக்களது மனம்கவர்ந்த அல்லது பிரபல்யமான நபர்களை நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்துதல்.
- நிகழ்ச்சியொன்றுக்கான பின்னணியைத் தயாரிக்கும்போது (Setting) புதிய தொழிநுட்பங்களைப் பயன்படுத்துதல்.
- மொழிப் பயன்பாட்டில் புதிய போக்குகளைப் பின்பற்றுதல்.
- பெறுநரது எதிர்வினைகளை அடிப்படையாக கொண்டு ஊடகத்தின் வகிபாகத்தைத் தீர்மானித்தல்.
- செய்தித்தாள்களில் இதர இணைப்புக்களை வெவ்வேறு தலைப்புக்களின் கீழ் வெளியிடுதல்.
- அறிவிப்புச் செயற்பாடுகளில் புதிய போக்குகளைப் பின்பற்றுதல்.
- ஒலி, காட்சி மற்றும் எழுத்து என்பவற்றைப் பயன்படுத்தும்போது புதிய போக்குகளைப் பின்பற்றுதல்.

**ஆ. பொழுதுபோக்கிற்கு அதிக கவனம் செலுத்தப்படுதல்.**

- பொழுதுபோக்கு அம்சங்கள், உள்ளடக்கங்களுக்கு அதிக நேரம் ஒதுக்குதல்.
- ஊர்வம்பு மற்றும் அதிகாரபூர்வமற்ற செய்திகள் தொடர்பிலும் அவதானம் செலுத்துதல்.
- சமூக ஊடக உள்ளடக்கங்களை (TikTok, YouTube) ஊடக முன்வைப்பு மாதிரிகளாகப் பயன்படுத்துதல்.

**உதாரணங்களுடன் விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.**

**03 புள்ளிகள் x 2 = 06 புள்ளிகள் (உதாரணம்)**

**05 புள்ளிகள் x 2 = 10 புள்ளிகள் (விபரிப்பு)**

**மொத்தம் = 16 புள்ளிகள்**

**5.** பாடசாலை ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தை ஒழுங்கமைக்கும் குழுவில் ஒரு அங்கத்தவராக நீங்களும் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் எனக் கற்பனை செய்துகொள்க.

(i) மேற்படி விழாவிற்கு நிகழ்வு முகாமைத்துவம் ஏன் தேவைப்படுகின்றது என்பதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

- நிகழ்வை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கு.
- முன்மொழியப்பட்ட பாதீட்டிற்கு ஏற்ப நிதி முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்கு.
- நிகழ்வு தொடர்பாக ஊடகங்கள் மூலமாகப் பரப்புரை செய்வதற்கு.
- முரண்பாடு மற்றும் அச்சுறுத்தல் நிலைமைகளை முகாமை செய்வதற்கு.
- ஆண்டு விழாக் கொண்டாட்டத்துடன் தொடர்புபட்ட அங்கத்தவர்களிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கு.
- நிகழ்வுடன் தொடர்புபட்ட மனித வளங்களை முகாமை செய்வதற்கு.
- நிகழ்வுடன் தொடர்புபட்ட பௌதீக வளங்களை முகாமை செய்வதற்கு.
- பாடசாலை மீதான நல்லெண்ணம் மற்றும் பிரதிமை என்பவற்றை விருத்தி செய்வதற்கு.
- நேரமுகாமைத்துவத்தினைப் பேணுவதற்கு.
- பாடசாலைசார் தரப்பினரைக் கவர்தல், ஒத்துழைப்பைத் தக்கவைப்பதற்கு.

**02 புள்ளிகள் x 2 = 4 புள்ளிகள்**

(ii) நீங்கள் ஊடக அதிகாரியாகச் செயற்படுகிறீர்கள் என்பதாக இருந்தால், விழாவிற்கு முன்னதாக நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பணிகள் இரண்டினை விபரிக்குக. (08 புள்ளிகள்)

- ஊடகக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பங்கேற்றல்.
- ஊடகங்களுக்குத் தகவல் வழங்குதல்.
- இணையத்தளம் மற்றும் வலைப்பூக்கள் முதலான புதிய ஊடகங்களை உருவாக்குதல் மற்றும் இற்றைப்படுத்துதல்.
- உள்ளக மற்றும் வெளித்தரப்பினருக்குத் தகவல் வழங்குதல்.
- நிகழ்விற்கு ஊடக நிறுவனங்களை அழைத்தல் மற்றும் ஒழுங்கமைத்தல்.
- தேவைப்படும் புகைப்படங்களைச் சேகரித்தல்.
- கையேடுகள், புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் செய்தி மடல் முதலான அச்சு ஊடக வெளியீடுகளைத் தயாரித்தல்.
- பாடசாலையின் வளர்ச்சி தொடர்பான ஆவணப்படங்கள் மற்றும் விளம்பரங்கள் முதலானவற்றை உருவாக்குதல்.

**04 புள்ளிகள் x 2 =8 புள்ளிகள்**

(iii) உயர்நிலை ஊடக விளங்கறிவைக் கொண்டுள்ள மாணவர்களை உருவாக்குதல் விழாவின் நோக்கங்களில் ஒன்றாகும். ஜேம்ஸ் பொட்டர் கூறுவதின்படி, ஊடக விளங்கறிவை விருத்தி செய்வதால் கிடைக்கும் ஆதாயங்கள் மூன்றினை விபரிக்குக. (12 புள்ளிகள்)

**வெவ்வேறு ஊடகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான விருப்பம் அதிகரித்தல்**

- ஊடகத் தாக்கங்களுக்கு உள்ளாகாது, உயர் இரசனையுடைய ஊடகங்களைத் தெரிவு செய்ய முனைதல்.
- பெறுநரது அறிவு மற்றும் விளக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்காக ஊடகங்களைப் பயன்படுத்துதல்.
- வெவ்வேறு ஊடகங்கள் மூலம் கிடைக்கப்பெறுகின்ற விசாலமான தகவல்களில் இருந்து தமக்குத் தேவையான தகவல்களை மாத்திரம் தெரிவுசெய்தல்
- வெவ்வேறு வடிவங்களில் முன்வைக்கப்படுகின்ற தகவல்களைத் தமது தேவைக்கேற்ப பயன்படுத்துதல்.
- பெறுநர் தனது தேவைகேற்ப ஊடகத்தை தெரிவு செய்து பயன்படுத்துதல்.

**உள நடத்தையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்**

- தனது நோக்கத்தை முதன்மைப்படுத்தி செயற்படும் பெறுநரை உருவாக்குதல்.
- சுய வலுப்படுத்தலை அல்லது முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்.
- பெறுநர்களுக்கு ஊடக நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கிடைத்தல்
- பெறுநரது தேவைகேற்பத் தகவல்களை வேறுபிரித்துப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் கிடைத்தல் .

**வெவ்வேறு ஊடகத் தகவல்களை விமர்சனரீதியாக பெற்றுக் கொள்ளும் ஆற்றல் கிடைத்தல் / ஊடகத்தினைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அதிகரித்தல்.**

- ஊடகத் தகவல்களின் உள் மற்றும் வெளியார்ந்த கருத்துக்களைக் கற்றறியும் ஆற்றல்.
- ஊடக நுகர்வுமயத்திற்கு உள்ளாகாது இருத்தல்.
- சுய இலக்கை பெறுநர் அடையும் ஆற்றல்.
- மிகவும் உயர் இரசனையுடைய ஊடகம் எது அல்லது எவை என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல்.

**04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்**

(iv) சமூகத்தில் பாடசாலை தொடர்பான நற்பிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படக்கூடுமான சமூக ஊடகங்களின் தாக்கங்கள் நான்கினை உதாரணங்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

- செயற்படு பெறுநர் சமூகமொன்றை உருவாக்குதல்.
- தேசிய மற்றும் சர்வதேச அளவில் பிரசித்தம் பெற்றுக் கொள்ளுதல்.
- பாடசாலையின் வரலாறு, மாணவர்களது திறமைகள், வெற்றிகள் மற்றும் புகழ்வாய்ந்த பழைய மாணவர்கள் பற்றிய விபரங்களைச் சமூகமயப்படுத்துதல்.
- படைப்பாக்க ரீதியிலான திறன்களை வெளிப்படுத்துதல்.
- பாடசாலை தொடர்பில் சமூகத்தில் காணப்படும் வேறுபட்ட எண்ணங்களை அறிந்து அவற்றுக்கு நேர்மறையான எதிர்வினைகளைத் தெரிவித்தல்.
- பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான எதிர்கால திட்டங்களை சமூகமயப்படுத்துதல்.

**உதாரணங்களுடன் விபரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.**

**04 புள்ளிகள் x 4 =16 புள்ளிகள்**

6. வெகுசன ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதன் அவசியம் பற்றி பொதுமக்கள் அபிப்பிராயத்தைப் அறிந்து கொள்ளும் ஆய்வொன்றுக்கான தரவு சேகரிப்பாளராக உங்களுக்கு வாய்ப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

(i) ஆய்வினைப் பயன்படுத்துவதன் ஆதாயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

- குறுகிய காலத்தில் தரவுகளைச் சேகரிக்க முடியும்.
- செலவு குறைவாகக் காணப்படும்.
- தொலைபேசி, இணையம், கடிதம் என்பவற்றைப் பயன்படுத்தி தூரத்தில் இருக்கும் ஒருவரிடம் இருந்தும்கூட தகவல் திரட்ட முடியும்.
- தரவு மூலகர்த்தாக்கள் (தகவலாளிகள்) விசாலமான எண்ணிக்கையிலிருந்தாலும் தகவலைப் பெற முடியும்.
- மென்பொருட்களைப் பயன்படுத்தி அல்லது பயன்படுத்தாதும் (ஆய்வாளர் தன்னளவிலும்) தரவுகள் திரட்ட மற்றும் பகுப்பாய்வு செய்யமுடியும்.
- மிகவும் நம்பகத்தன்மையுடன் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ய முடியும்.
- பரந்துபட்ட தகவல்களையும் எவ்வித பிரச்சனையுமின்றி சேகரித்துக்கொள்ள முடியும்.
- தடை /இடையூறுகளை இழிவளவாக்க முடியும்.

**02 புள்ளிகள் x 2 =4 புள்ளிகள்**

(ii) ஊடக ஒழுங்குபடுத்தலின் அவசியத்தை இரண்டு அம்சங்களைப் பயன்படுத்தி விபரிக்குக. (08 புள்ளிகள்)

- பொதுமக்கள் மத்தியில் அமைதியை பேணுவதற்கு.
- நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு.
- தொழிநுட்ப தரப்படுத்தலை மேற்கொள்வதற்கு.
- வெவ்வேறு தொடர்பாடல் வடிவங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கு.
- பொதுவான மக்கள் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தி, தனிநபர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு.

- பல்வகைமை மற்றும் பூகோளப் பெறுதிகளின் அல்லது விழுமியங்களின் வளர்ச்சிக்கு.
- தொடர்பாடலின் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கு.
- பண்பாட்டுத் தனித்துவத்தைப் பாதுகாத்து அதன் மூலம் ஊடகத் தகவல்களை அணுகுவதற்கு.
- புதியன புனைவதற்கு.
- தகவலை (தகவல் என்பது ஒரு வளம்) சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு.

**04 புள்ளிகள் x 2 = 8 புள்ளிகள்**

(iii) உலக அளவில் ஊடக ஒழுங்குபடுத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் பிரவேசங்கள் மூன்றினை விளக்குக. (12 புள்ளிகள்)

- சுயதணிக்கை. (சுய ஒழுங்குபடுத்தல்)
- கூட்டுத் தணிக்கை.(கூட்டு ஒழுங்குபடுத்தல்)
- சட்டரீதியான தணிக்கை. (சட்டரீதியான ஒழுங்குபடுத்தல்)
- நிறுவனரீதியான தணிக்கை. (நிறுவனரீதியான ஒழுங்குபடுத்தல்)

**சுய ஒழுங்குபடுத்தல்**

- அரசின் தலையீடு இன்றி ஊடகத்தினால் சுயமாக மேற்கொள்ளப்படும் ஒழுங்குபடுத்தல் இதுவாகும்.
- ஊடக உரிமையாளர்கள், ஆசிரிய பீடத்தினர், ஊடகவியலாளர்கள் ஆகியோர் இணைந்து அல்லது தனியாக மேற்கொள்ளும் ஒழுங்குபடுத்தல்.
- தொழில்சார் ஊடகவியலாளர்களது பங்குபற்றலுடன் ஊடக ஒழுக்கநெறி அல்லது வழிகாட்டி தயாரிக்கப்படும்.
- சுய ஒழுங்குபடுத்தல் சரியான முறையில் செயற்படுத்தப்படுகின்றதா என்பதனைக் கண்காணிப்பதில் ஊடகச் செயற்பாடுகளில் தொழில்ரீதியாக ஈடுபடும் நிபுணர்கள், பொதுமக்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆய்வாளர்கள் என்போர் கண்காணிப்புக்குழு மற்றும் ஆணைக்குழுவில் இணைத்துக் கொள்ளப்படுதல்.
- ஊடகம் சார் முரண்பாடுகளை இனங்காணுதல் மற்றும் அவற்றிற்கான தீர்வுகளை முன்வைத்தல் .

**கூட்டு ஒழுங்குபடுத்தல்**

- ஊடகப் பிரதிநிதிகளின் முழுமையான தலையீட்டுடன் சட்டபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் கூட்டு ஒழுங்குபடுத்தலாகும்.
- ஊடகப் பிரதிநிதிகளாக ஊடக உரிமையாளர்கள், ஊடக ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என்போர் காணப்படுவர்.
- வெகுசன ஊடகப் பிரதிநிதிகளின் பங்குபற்றலோடு ஊடக ஒழுக்கநெறிகள், ஊடக அறிவுரைப்பு வழிகாட்டிக் கோவைகள் என்பன தயாரிக்கப்படும்.
- ஊடகத்துறை சார்ந்தோருக்கு இதன் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளின்றும் விலக முடியாதிருத்தல்.
- சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ளதனால் அரச தலையீடு காணப்படுதல்.
- பொறுப்புடமையான கூட்டு ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படுதல்.

**சட்டரீதியான ஒழுங்குபடுத்தல்**

- சட்டத்தினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் முறை.
- சிவில் சமூகக்குழுக்கள், நீதியாளர்கள், கல்வி ஆய்வாளர்கள் போன்றோரைப் பிரதிநிதிதுவப்படுத்தும் தரப்பினர் இங்கு அங்கத்துவம் பெறுவர்.
- அரசியல் தலையீடு காணப்படுவதால் இதன் சுயாதீனத்தன்மை சவாலுக்கு உட்பட்டது.
- வெகுசன ஊடகங்களைத் தீவிரமாகக் கட்டுப்படுத்த முடிதல்.

**நிறுவனரீதியான ஒழுங்குபடுத்தல்**

- ஊடக நிறுவனங்களினால் தமது ஊடக நிறுவனத்தினாலேயே மேற்கொள்ளப்படும் ஒழுங்குப்படுத்தல் முறைமை.
- ஊடக நிறுவனத்தினால் ஊடக நிறுவனத்துக்கான ஒம்புட்ஸ்மன் (குறைகேள் அதிகாரி) நியமிக்கப்படுதல்.
- ஒம்புட்ஸ்மனாக நியமிக்கப்படுபவர் பெரும்பாலும் சிரேஸ்ட ஊடகவியலாளர் ஒருவராக இருத்தல்.
- நிறுவனத்தின் மீதான முறைப்பாடுகளுக்கான பரிந்துரைகளை ஒம்புட்ஸ்மன் முன்வைத்தல்.
- தொழில்ரீதியாக உயர்மட்டத்தில் காணப்படும் ஊடக நிறுவனங்களுக்கு இம்முறைமை மிகவும் பொருத்தமானதாக இருத்தல்.

**04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்**

(iv) "சமூக ஊடகச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய தேவையைக் கொண்டுள்ளன." இந்தக் கூற்றுக்குச் சார்பான இரண்டு அம்சங்களையும், எதிரான இரண்டு அம்சங்களையும் விபரிக்குக. (16 புள்ளிகள்)

**சார்பானது**

- சமூகத்தில் போலியான தகவல்கள் பரவுதல் தவிர்க்கப்படுதல்.
- சமூகத்தில் முரண்பாடுகள் ஏற்படுதல் தவிர்க்கப்படுதல்.
- பொய்யான தகவல்கள் பரவுதல் தவிர்க்கப்படுதல்.
- தனிநபர் மற்றும் மக்கள் குழுக்களுக்கு ஏற்படும் அவமரியாதைகள் தடுக்கப்படுதல்.
- தனிநபர்மையப்படுத்தப்பட்ட செய்திகள் வெளியிடப்படுவதால் ஏற்படும் தாக்கம் கட்டுப்படுத்தப்படல்.
- சமூகத்தில் காணப்படும் சிக்கலான நிலைமைகள் கட்டுப்படுத்தப்படல் .
- அசௌகரியமான மற்றும் ஒழுக்கநெறி முறைகளை மீறிய செய்திகள் மக்கள்மயப்படுதல் தவிர்க்கப்படல்.
- ஊடகங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரபூர்வமான செய்திகளைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
- வெறுப்பூட்டும் பேச்சுக்கள் பரவுதல் தவிர்க்கப்படுதல்.
- ஒழுக்கநெறி மீறல்கள் தவிர்க்கப்படுதல்.
- சமூக ஊடகங்கள் மூலமாக நிர்வகிக்கப்படும் போலியான அல்லது ஏமாற்றுத்தனமான வியாபாரங்களுக்கான வாய்ப்புக்கள் தவிர்க்கப்படல்.
- சட்ட திட்டங்களுக்கேற்பச் சமூகத்தைக் கட்டுப்படுத்தப்பட முடிதல்.

**எதிரானது**

- சுதந்திரமாகக் கருத்துக்களை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்படல்.
- தகவல் அறியும் சுதந்திரம் மீறப்படுதல்.
- சாமானியரது குரல் ஒடுக்கப்படுதல்.
- அதிகாரவாதக் கருத்தியல்கள் பலம் பெறுதல்.
- முறைசாராத் தொடர்பாடல் மட்டுப்படுத்தப்படுதல்.
- நிகழ்நிலை வணிகத்துறை வீழ்ச்சி அடைதல்.
- படைப்பாக்க ரீதியிலான சிந்தனைகளுக்கான வெளி குறைவடைதல்.
- மாற்று ஊடகச் செயற்பாடுகள் நலிவடைதல்.
- சமூக யதார்த்தம் வெளிக்கொணரப்படுவது சவாலுக்குட்படுத்தப்படுதல்.

**04 புள்ளிகள் x 2 = 8 புள்ளிகள் (சார்பானது)**

**04 புள்ளிகள் x 2 = 8 புள்ளிகள் (எதிரானது)**

**மொத்தப் புள்ளிகள் = 16 புள்ளிகள்.**

7. நீங்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி எனக் கற்பனை செய்துகொள்க.

(i) பொதுமக்கள் தொடர்பு அதிகாரி தொழிலைக் கடந்த காலங்களில் அடையாளப்படுத்தப் பயன்பட்ட பதவிநிலைகள் **இரண்டினை** எழுதுக. (04 புள்ளிகள்)

- குரல்தரவல்ல அதிகாரி.
- எழுதுநர்.
- இறைதூதர்கள்.
- பிரசித்தப்படுத்துபவர்கள்.
- பிரபுக்கள் சபையில் அதிபதி.
- மதகுருமார் – ஆன்மிகவாதிகள்.

**02 புள்ளிகள் x 2 = 4 புள்ளிகள்**

(ii) நிறுவன ஊடக அதிகாரியின் பணிகள், பொதுமக்கள் தொடர்பு அதிகாரியின் பணிகளை ஒத்திருக்கும் சந்தர்ப்பங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக. (08 புள்ளிகள்)

- நிறுவனங்கள் தொடர்பில் ஊடகங்களால் மேற்கொள்ளப்படும் விமர்சனங்களுக்குப் பதிலளித்தல். மற்றும் ஊடகக் கலந்துரையாடல்கள், மாநாடுகளின்போது நிறுவனத்தைப் பிரதிநிதித்துவம் செய்தல்.
- ஊடக மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல், நிறுவனத்துடன் தொடர்புபட்ட கடிதங்கள் மற்றும் ஊடக அறிக்கைகளைப் பகிர்ந்தளித்தல்.
- நிறுவனத்தின் ஊடகச் செயற்பாடுகள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துதல்.
- நிறுவனம் தொடர்பில் மக்கள் மற்றும் ஊடகங்களுக்கு விளக்கமளித்தல்
- செய்தி வெளியீடுகள், ஊடகக் கலந்துரையாடல்கள் என்பவற்றை ஏற்பாடு செய்தல்.
- தொலைக்காட்சி, வானொலி, செய்திப்பத்திரிகை மற்றும் இணையத்தளங்கள் முதலான ஊடகங்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளல்.

- ஊடகச் செய்திகளைப் பகுப்பாய்வு செய்தல்.
- இடர்நிலைமைகளின் போது ஊடகங்கள் மற்றும் ஏனைய தொடர்புகளைப் பயன்படுத்தி அவற்றை முகாமை செய்தல்.
- ஊடக ஒழுக்கநெறிகளைப் பின்பற்றுதல்.

**04 புள்ளிகள் x 2 = 8 புள்ளிகள்**

(iii) சமூகத்தினுள் வறுமையை இழிவளவாக்க அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மூன்றினை விபரிக்குக. (12 புள்ளிகள்)

- நிலையான சீவனோபாயத்தை உருவாக்குதல்.
- தொழில்வாய்ப்புக்களை அல்லது முயற்சியாண்மைகளை அதிகரித்தல்.
- வினைத்திறனான வகையில் வளங்கள் நுகரப்படுதலை ஊக்குவித்தல்.
- அடிப்படைச் சமூக சேவைகளுக்கான வாய்ப்புக்களை வழங்குதல்.
- தமது சக்தியால் முன்னேற இயலாதவர்களுக்கு உதவுதல்.
- வறுமையில் வாடும் மக்கள் மற்றும் அவர்களது அமைப்புகளை வலுப்படுத்துதல் .
- வறுமையால் பாதிக்கப்படும் பெண்களுக்குத் தீர்வுகள் ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வறுமையை ஒழிக்க அபிவிருத்திக்கான தொடர்பாடலில் அதிக கரிசனை செலுத்துவதோடு, சர்வதேச ஒத்துழைப்பையும் வலுப்படுத்துதல் .
- கல்வி வசதிகளை ஏற்படுத்துதல்.

**04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்**

(iv) அபிவிருத்திக்குத் தொடர்பாடல் எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என்பதைக் கீழுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, உதாரணங்களுடன் விளக்குக.
(அ) தேவைகளை மையப்படுத்துதல்
(ஆ) ஆரோக்கியமான சூழலொன்றைக் கட்டியெழுப்புதல் (16 புள்ளிகள்)

**அ. தேவைகளை மையப்படுத்துதல்**

மானுடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வசதிகள் மற்றும் சேவைகளை உருவாக்குவதற்குத் தொடர்பாடலைப் பயன்படுத்துதல்.

- சுகாதார சேவையை தரமுயர்த்துதல்.
- போசாக்குச் சேவையை தரமுயர்த்துதல்.
- வசிப்பிட வசதிகளைத் தரமுயர்த்துதல்.
- மனித உரிமைகளை உறுதிப்படுத்துதல்.
- உட்கட்டமைப்பு வசதிகளைத் தரமுயர்த்துதல்.
- கல்வி வசதிகளைத் தரமுயர்த்துதல்.
- உயர் இரசனைக்கான வசதிகளை/ வெளிகளை ஊக்குவித்தல்.

**ஆ. ஆரோக்கியமான சூழலொன்றைக் கட்டியெழுப்புதல்**

சூழலியல் சமநிலையை (உயிர்ப் பல்வகைமை) உருவாக்குதல்.

- அனைத்து உயிரினங்களினதும் இருப்பிற்குத் தேவையான உணவைப் போதுமான அளவு பெற்றுக்கொள்தல் மற்றும் அவற்றின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துதல்.
- வளச் சுரண்டலைத் தடுத்தல்.
- காடழிப்பைத் தடுத்தல்.
- மரநடுகை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- அனர்த்த முகாமைத்துவத் தொடர்பாடலை மேம்படுத்துதல்.
- நீதி, நியாயம் முதலான விடயங்களில் கவனம் செலுத்துதல்.

(மேற்காணும் விடயங்களுக்கூடாக அபிவிருத்திக்கான தொடர்பாடல் பயன்படுத்தப்படும் விதத்தினை உதாரணங்களுடன் விபரித்திருத்தல் வேண்டும்)

**03 புள்ளிகள் x 2 = 06 புள்ளிகள் (உதாரணம்)**

**05 புள்ளிகள் x 2 = 10 புள்ளிகள் (விபரிப்பு)**

**மொத்தம் = 16 புள்ளிகள்**